09.புரட்டாதி, 2021

பக்கங்கள்- 04

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 01

## விடுதலைப்புலிகள் தீவிரவாதிகள் அல்ல, இனவழிப்பிலும் அவர்கள் ஈடுபடவில்லை – கூட்டமைப்பு ஒருமித்தக் கருத்துடனேயே இருக்கிறது என்கிறார் மாவை சேனாதிராஜா



**அண்மைக்காலங்களாக திரிபுபடுத்தபட்ட வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்படுகொலை செய்த அரசினைக் காப்பாற்றுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது என வெளியாகும் செய்திகளில் உண்மைத்தன்மை எதுவும் இல்லை. முஸ்லீம் மக்களை 1990களில் வெளியேற்றியது இனச் சுத்திகரிப்பு அல்ல, அது விடுதலைப்புலிகளின் போர்த் தந்திர நடவடிக்கைகளாகும்.**

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அவர்களை மீள வந்து குடியேறுமாறு விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுக்க, முஸ்லீம் மக்கள் மீண்டும் வந்து குடியேறினார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள், முஸ்லீம் மக்களை வெளியேற்றியது இனச்சுத்திகரிப்பு என்று கூறியது அவரது தனிப்பட்ட கருத்து. அதனை கூட்டமைப்பு கூறியதாக பொருள்படாது. அதே 1990களில் ஊர்காவற்படை என்கிற பெயரில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை கிழக்கில் கொன்றொழித்து, இந்து ஆலயங்களை உடைத்து, பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் இடம்பெயர, அப்போதைய இலங்கை அரசினால் பயன்படுத்தப்பட்டவர்கள் யார்? என இன்று கிழக்கில் சென்று விசாரித்தால் அறிய முடியும்.

சர்வதேச நீதிமன்றத்தின் விசாரனைகளை மழுங்கடிப்பதற்காக, அரசிற்குத் துணைபோக, ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் முயற்சிக்கிறார்கள். அதேநேரம் கூட்டமைப்பை பிளவுபடுத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கிறார்கள். இது இன்று நேற்று அல்ல, காலங்காலமாக இச்செயற்பாடு தொடர்ந்தவண்ணமே இருக்கிறது. இங்கு இனப்படுகொலை இடம்பெற்றது என்பதற்கு மாற்றுக்கருத்தில்லை. இது தொடர்பாக சர்வதேச நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்படும் போது, அதன் தீர்ப்பு தமிழினத்திற்கு சார்பாக அமையப்பெறும். ஆகவே அதனை ஏதோவொரு வகையில் குழப்பவேண்டும் என எத்தணிப்பவர்களின் சதித் திட்டங்களே இவை. தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் தடைகளை உடைத்து செயற்படும் என்பதை இவ்விடத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

## இந்தியாவில் நிபா வைரஸ், எச்சரிக்கும் அமெரிக்கா - டெல்டாவினால் பெரும் ஆபத்தில் இலங்கை - தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அலட்சியப்படுத்தப்படுகிறதா?

**நாட்டில் மேலும் 185 கொவிட் மரணங்கள் நேற்று (08.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணி க்கை 10,689 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தோரில் 102 ஆண்களும், 83 பெண்களும் அடங்குகின்றனர். அத்துடன் இன்று 2917 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 474,780 ஆக அதிகரித்துள்ளது.**

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## நெருக்கடிக்குள் ஆட்சியை நடத்தவேண்டிய நிலையில் ஜனாதிபதி

ஏதேதோ கனவுகளுடன், திட்டங்களுடன் ஆட்சியைப் பொறுப்பெடுத்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களால் நாட்டைக் கொண்டு நடத்துவதில் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவே நடக்கும் சம்பவங்களிலிருந்து அறிய முடிகின்றது. கொவிட் பரவல். மேலும் அதனது வீரியம் மிக்க திரிபுகளின் பரவல் என நாட்டை இத்தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டிய நிலை இருக்க, இலங்கையினது பொருளாதாரம் ஒரு பக்கம் சரிவைக் கண்டிருக்கும் நிலையில் அபிவிருத்திப் பாதை நோக்கி நாட்டை முன்னகர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் மறுபக்கம் இருக்கிறது. நாட்டை தொடர்ந்து முடக்கிவைக்க முடியாத நிலையில். நாட்டின் நிதிநிலைமைகளைக் கையாள முடியாத அளவிற்கு தலையிடியாக அனைத்தும் வந்து சேர்ந்திருக்கின்றன.

மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து உணவுத்தேவையை நிறைவேற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலையும் தோன்றாமலில்லை. பணமிருந்தால் பொருள் இல்லை. பொருள் இருந்தால் வாங்கி உண்பதற்கு பணம் இல்லாத நிலையினை நாம் கண்ணால் பார்க்கிறோம். நாட்டை முடக்கிவைத்திருந்தால் மட்டும் போதுமா? அரசு நிவாரணம் தரவேண்டாமா? என திட்டித்தீர்க்காதவர்களும் இல்லை. உலக சுகாதார நிறுவனம் தொடர்ந்தும் எச்சரிக்கிறது. நாட்டின் மருத்துவர்கள் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறோம் என்கின்றனர். இதற்குள் சொந்த வீட்டுக்குள் குத்துவெட்டுக்களும் தலைதூக்கியுள்ளது. இந்நிலையில் சி.I.2 வரலாம் என்கிறார்கள். நிபாவும் எதிர்காலத்தில் உலக நாடுகளிடையே பரவ வாய்ப்பு இருப்பதாக செய்தியும் வந்து சேர்ந்திருக்கிறது. இன்னும் என்னவெல்லாம் வரக் காத்திருக்கிறதோ?.

# வவுனியாவில் அதிகரிக்கும் கொவிட் மரணங்களும், மக்களின் அசமந்தப்போக்கும்

*இலங்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட நிலையில், வவுனியா மாவட்டத்தில் 2019–2021 ஓகஸ்ட் மாதம் வரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணமானவர்களின் மொத்த எண்ணிக்கை 56 ஆக இருந்த நிலையில், கடந்த சில தினங்களாக கொரோனா மரணங்களின் எண்ணிக்கையானது மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுவதுடன் 2021.09.07 அன்று மட்டும் கொவிட் தொற்றால் வவுனியாவில் மரணமானவர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளதாகவும் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் மட்டும் வவுனியா மாவட்டத்தில் கொவிட் தொற்றால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக உள்ளதாக சுகாதாரத் தரப்பினர் கூறியுள்ளனர்.*

*அதேநேரம் பயணத்தடை வருவதற்கு முன்னர் கூட நாளாந்தம் 10க்குள் இருந்த தொற்றாளர்களின் எண்ணிக்கையானது பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட ஓகஸ்ட் மாதத்தில் இருந்து நாளாந்தம் 150–200 பேருக்குள் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.*

*உண்மையில் வவுனியா மாவட்ட மக்களின் அசமந்தப்போக்கும் இதற்கு ஒரு காரணமாக அமைவதுடன் சுகாதாரத் தரப்பினர் மற்றும் பொலிசார், இராணுவத்தினர் தமது செயற்பாட்டை சற்று தளர்த்தியுள்ளது போல் தெரிகின்றது. வவுனியா நகருக்கு தினமும் மக்கள் அதிகளவில் வந்துசெல்வது பயணத்தடை அமுல் இல்லாதது போல் வவுனியா காட்சியளிப்பதாகவும், பயணத் தடையானது வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதற்கு மட்டும் தானோ என எண்ணத் தோன்றுகின்றது.*

*இந்நிலை தொடருமானால் பாரிய உயிர் சேதத்தையும், தொற்றாளர்களின் எண்ணிக்கையில் பல மடங்கு அதிகரிப்பையும் எதிர்வரும் நாட்களில் வவுனியா மாவட்டம் சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றும். ஆகவே இதனை உடனடியாகத் தடுக்கும் வகையில் சுகாதாரப் பிரிவினரும், பொலிசார் மற்றும் இராணுவத்தினர் அநாவசியமாக நகருக்குள் நடமாடுபவர்களை கைது செய்வதுடன், தகுந்த தண்டனைகளை வழங்கவேண்டும் என்பதுடன், மக்களும் இந்நிலையினைக் கருத்திற்கொண்டு அநாவசியமாக வீடுகளை விட்டு வெளியே செல்லாது தங்களையும், தங்கள் குடும்பத்தினரையும், அயலவர்களையும் பாதுகாப்பதுடன் மாவட்டத்தையும் இக் கொடிய தொற்று நோயிலிருந்து பாதுகாக்க முன்வரவேண்டும். இல்லையேல் பாரிய அழிவைச் சந்திப்பது திண்ணம்.*

# தீர்வின்றித் தொடரும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டம்

**தமது கோரிக்கைகளுக்கான உரிய தீர்வொன்றை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி அல்லது நிதியமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடும் வரையில் தமது போராட்டம் தொடர்ந்தும் நடத்தப்படும் என ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. வேதன முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள் இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகி முன்னெடுத்துள்ள தொழிற்சங்க போராட்டம் 59 நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், எவ்வாறாயினும் தமது தொழிற்சங்க போராட்டத்தினால் மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரியத்திற்கான முழு பொறுப்பினையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

**ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள் இணைந்து ஜனாதிபதியுடனும், நிதியமைச்சருடனும் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருமாறு தொடர்ந்தும் கோரி வருவதாக அவர் குறிப்பிட்டார். எனினும், இதுவரையில் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. பல அமைச்சரவை கூட்டங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் அவற்றில் முறையான தீர்வு எட்டப்படவில்லை. இதனால் மாணவர்களே பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்தார்.**

## யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று நிலைமையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, அடுத்த மாதம் 07, 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் பொது பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் கட்ட நடவடிக்கையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார். மேலும் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலைக்கு மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 23 ஆம் திகதி அறிவிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.



டோக்கியோவில் நடைபெற்ற பராலிம்பிக் 2020இல் ஈட்டி எறிதல் போட்டியினூடாக புதிய உலக சாதனையை நிலைநாட்டி நாட்டை தங்கத்தால் அலங்கரித்த தினேஷ் பிரியந்த ஹேரத் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற சமித துலான் கொடிதுவக்கு ஆகியோர் நேற்று (08) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தபோது...

## கொவிட் ஆபத்து காரணமாக இலங்கைக்கு பயணம் செய்யவேண்டாம்

கொவிட் ஆபத்து காரணமாக இலங்கைக்கு பயணம் செய்ய வேண்டாம் என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் அந்நாட்டு குடிமக்களுக்கு அறிவித்துள்ளது. கொவிட் அபாயத்தின் அடிப்படையில் இலங்கையை 4 வது மட்ட அதிக ஆபத்து உள்ள நாடுகளில் ஒன்றாக பெயரிட்டு அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் இதனை குறிப்பிட்டுள்ளது. இலங்கையைத் தவிர. ஜமைக்கா மற்றும் புருனே ஆகிய நாடுகளை அதிக ஆபத்து உள்ள நாடுகளாக அமெரிக்கா பட்டியலிட்டுள்ளது.

அத்தியாவசிய கடமைக்காக இலங்கைக்குச் செல்ல விரும்பினால். முழுமையான தடுப்பூசி டோஸ்களை பெற்றிருக்க வேண்டும் என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய நிலைமையின் படி முழுவதுமாக தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களுக்கும் கொவிட் தொற்று ஏற்படும் வாய்ப்பு மற்றும் பரவும் வாய்ப்பு அதிகமாக காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தலிபான் - சீனா கூட்டு: உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலா?



ஆப்கானிஸ்தானில் புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கம் மற்றும் அதன் தலைவர்களுடன் தொடர்புகளைப் பேண பீஜிங் தயாராகவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தை பீஜிங் அங்கீகரிக்குமா என்று வினவியபோதே சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் வாங் வென் பின், ஆப்கானிஸ்தானின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை சீனா மதிக்கிறது என தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றிய பின்னர் ஒரு பொறுப்பான அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரவை உறுப்பினர்களை செவ்வாய்க் கிழமை பெயரிட்டனர். இதில் 2001இல் வீழ்ச்சியடைந்த முந்தைய தலிபான் அரசாங்கத்தில் துணைப் பிரதமராகப் பணியாற்றிய முல்லா ஹசன் அகுந்த் இடைக்காலப் பிரதமராகப் பெயரிடப்பட்டார். அமெரிக்காவுடன் இராஜதந்திர பேச்சுவார்த்தைகளைக் கையாண்ட குழுவின் இணை நிறுவனர் முல்லா அப்துல் கனி பரதர் துணைப் பிரதமராகப் நியமிக்கப்பட்டார். தலிபானின் முதல் தலைவர் முல்லா உமரின் மகன் முல்லா மொஹமட் யாகூப் பாதுகாப்பு அமைச்சராகவும், ஹக்கானி நெட்வொர்க்கின் நிறுவனர் மகன் சிராஜூதீன் ஹக்கானி உள்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹெதாயத்துல்லா பத்ரி நிதி அமைச்சராக செயல்படுவார். அதேநேரத்தில் தோஹாவில் தலிபான் பேச்சுவார்த்தை நடத்திய அமீர்கான் முத்தாகி வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆப்கானிஸ்தானின் "புதிய இஸ்லாமிய அரசாங்கத்தின்" 33 உறுப்பினர்களைக் குறிப்பிட்டு. மீதமுள்ள பதவிகள் கவனமாக விவாதிக்கப்பட்ட பின்னர் அறிவிக்கப்படும் என்று தலிபான்கள் கூறியுள்ளனர்.

எனினும் இந்த அரசாங்கத்தில் பெண்கள் யாரும் இடம்பெறவில்லை. இந் நிலையில் செவ்வாய்க்கிழமை பெயரிடப்பட்ட தலிபான் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் குறித்து கவலைப்படுவதாக அமெரிக்கா கூறியுள்ளது. தலிபான் பயங்கரவாத அமைப்பாக ரஷ்யா மற்றும் பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் பொது மக்களுக்கு விடுத்துள்ள விஷேட அறிவித்தல்



(பைஷல் இஸ்மாயில்)

கொவிட் 19 தொற்றாளர்களும். அதிக அறிகுறிகள் இல்லாதவர்களும் தங்களின் தனிமைப்படுத்தும் காலங்களை ஆயுர்வேத வைத்திய சிகிச்சைகளுடன். பாரம்பரிய உணவு முறைகளை பெற்றுக் கொண்டு பூரண சுகத்தை பெற்றுக் கொள்வதற்கான சகல வசதிகளையும் முற்றிலும் இலவசமாக திருகோணமலை. மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டங்களிலுள்ள தள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் வழங்கப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தெரிவித்தார்.

கொவிட் 19 தொற்றாளர்களும். அதிக அறிகுறிகள் இல்லாதவர்களும் தங்களின் தனிமைப்படுத்தும் காலங்களை மிக அவதானமாக கடைப்பிடிப்பதன் மூலம் இந்தத் தொற்றிலிருந்து எமது குடும்ப அங்கத்தவர்களையும். ஏனையவர்களையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். எனவே. இம் மாவட்டங்களில் உள்ளவர்கள் தங்களின் தனிமைப்படுத்தும் காலங்களை பாரம்பரிய உணவு முறைகள் அடங்கிய வைத்திய ஆலோசனைகள் அடங்கிய சிகிச்சைகளை முற்றிலும் இலவசமாக திருகோணமலை கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலை. மட்டக்களப்பு தள ஆயுர்வேத வைத்தியசாலை. அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை. கிண்ணியா நடுத்தீவு மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அங்கு சீனிப் பரிசோதனை. குருதி அமுக்க பரிசோதனை. சுவாசப் பரிசோதனை உள்ளிட்ட பல வைத்திய பரிசோதனைகளுடன் சிகிச்சைகளும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடிய பாரம்பரிய உணவு வகைகளையும் நாளாந்தம் இலவசமாக வழங்கி வருவதாகவும் மேலும். திருகோணமலை மாவட்டத்திலுள்ளவர்கள் தங்களின் தனிமைப்படுத்தும் காலங்களை கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 தொற்று தற்போது வேகமாக பரவி வருவதனால் பொதுமக்கள் தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். எனவே. திருகோணமலை மாவட்டத்திலுள்ளவர்கள் தங்களினதும். தங்கள் குடும்பத்திலுள்ளவர்களின் உடல் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாக்க திருகோணமலை மாவட்டங்களிலுள்ள பிரதேசங்களில் இருக்கின்ற ஆயுர்வேத வைத்திய பொறுப்பதிகாரி மற்றும் சமூக நல வைத்தியர்களை தொடர்புகொண்டு கொவிட் 19 தொடர்பான வைத்திய ஆலோசனைகளுடன் அதற்கான சிகிச்சை முறைகளை முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

**திருகோணமலை மாவட்ட பிரதேசங்களிலுள்ள வைத்திய பொறுப்பதிகாரிகள் மற்றும் சமூக நல வைத்தியர்களின் தொலைபேசி இலக்கங்கள்**

திருகோணமலை பட்டணமும். சூழலும் பிரதேச செயலாளர் பிரிவு **Dr.K.Niruba - 0740037294, Dr. N.Subashini - 0779749780, Dr. A.Ilankumaran -0740037282.**
குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. S.R.P.Rajeev – 0740037290, Dr. S.Sathees – 0740037251, Dr. R.Vaikalai – 0774605627.**
கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. Prasadika Wijeyasekara – 0717787101, Dr.Chamal Wijayasooriya – 0714410301.**
மொறவேவா பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. Kasundweera – 0713406651.**
பதவிய ஸ்ரீபுர பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. Jeyamal Indika Kumara -0710373003.**
கோமரங்கடவல பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. Jeyamal Indika Kumara -0710373003**
மூதூர் பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. H.M.Haris – 0772254232.**
தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. M.N.P.Mohanachandran – 0752785468, Dr. J.Arunpalan – 0752340800.**
கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. I.S.M.Riswan – 0754381712, Dr.Mrs.M.F.Fahmitha – 0778470575.**
சேருவில பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. Erandi Jeyasinghe – 0783521989.**
வெருகல் பிரதேச செயலாளர் பிரிவு – **Dr. Y.M.Rishad – 07197033878.**

# நிபா வைரஸ் கொரோனாவை விட ஆபத்து – எச்சரிக்கும் அமெரிக்கா

கொரோனாவை விட நிபா வைரஸ் அதிகளவிலான பாதிப்பை ஏற்படுத்தும் என அமெரிக்க நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் எச்சரித்துள்ளது. இந்தியாவின் கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பால் சிறுவன் ஒருவன் உயிரிழந்த நிலையில், கேரள மாநிலத்தில் மிகப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், உயிரிழந்த சிறுவனின் வீட்டிற்கு சென்ற மத்திய குழுவினர் அங்கிருந்த பழங்களின் மாதிரிகளை சேகரித்து, தொடர்ச்சியாக அது குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இது குறித்து கூறியுள்ள அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம், கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பிற்கு தடுப்பு மருந்துகள் இல்லாததால் ஆரம்பத்திலேயே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என கூறி உள்ளது.

அத்துடன், நிபா வைரஸின் அறிகுறிகள் ஆரம்ப கட்டத்தில் கண்டறிவது சவால் நிறைந்ததாக இருந்தாலும், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நோய் பரவுதலை தடுக்கும் விதமாக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் கூறியுள்ளது.

மேலும் , நிபா வைரஸ் கொரோனா வைரஸை விட அதிக பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளதாகவும், இது உலகளாவிய நோய் தொற்றாக மாறக்கூடும் எனவும் அமெரிக்க நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.